**Chapter - 16 - Speech for 14th January 2023 – 2 - The Triple Status of Supermind**

சென்ற முறை பேசிய போது அந்த வாரத்தோடு, அத்தியாயம் பதினாறை முடித்துக் கொள்கிறேன் என்றேன். என்றாலும் குறுஞ்செய்திகள் , இந்த முறை சற்றே தத்துவமாக இருந்தது, DRY ஆக இருந்தது என்று வந்தது. ஒரு சிலர் அதை புரிந்துக் கொள்ளும் அளவிற்கு எங்களுக்கு சித்தம் இல்லை என்று அடக்கமாக சொன்னார்கள். அதனால் அதை இன்னும் எளிமை படுத்த முடியுமா என்று சிந்தித்த போது தோன்றியவற்றை இன்று பகிர்ந்துக் கொள்கிறேன். அதாவது பதினாறாவது அத்தியாயமான TRIPLE STATUS OF SUPERMIND என்னும் அத்தியாயத்தை பற்றிய மேலும் சில கருத்துக்களை இங்கு பகிர்ந்துக் கொள்கிறேன்.

SUPERMIND - அதிமனதின் மூன்று நிலைகளை, பரமாத்மா, ஜீவாத்மா, அகந்தை என்று மூன்று பரிமாணங்களில் வெளிப்படுத்துகிறது என்பது இந்த அத்தியாயத்தின் ஒரு வரி கருத்து. அதை நடைமுறைப்படுத்த - தான் யார் என்று முழுதும் உணர்ந்த நிலை, தான் யார் என்று மறக்க முடியாத நிலை, பிரிந்த பிறகும் தன் ORIGIN ஐ, மூலத்தை நினைவு வைத்துக் கொண்டு இருக்கும் ஒரு நிலை என்று புரிதலுக்காக எடுத்துக் கொள்கிறேன். நடைமுறையில், நாமே இறைவன் என்று உணர்வதற்கு முன்னால், அல்லது இறைவன் தான் நம்முள் இருக்கிறான் என்று உணர்வதற்கு முன்னால், அதாவது முதல் இரண்டு பரிமாணங்களுக்கு முன்னால், நம்மை பிரித்து உணர்ந்து கொண்டு இருந்தாலும் இறைவனை நோக்கிய, அவன் பண்புகளை நோக்கிய நம் பார்வை மூன்றாம் நிலை என்று எடுத்துக் கொள்கிறேன். அது ஞானமும், உறுதியும், பிரித்தறியும் மனதின் முந்தய நிலை என்பதால் அதனை நோக்கிய நம் பார்வை, அதாவது பிரித்தறியும் நிலையில் நாம் இருந்தாலும் ஒருமையை நோக்கிய ஒரு பார்வை நம்மை பரிணாமத்தில் வளர வைக்கிறது. அல்லது சூழல்கள் அதற்கு ஏற்ப கட்டமைக்கப்படுகிறது. அது இறைவனுக்கான பூரண சுமுகம் என்னும் பண்புக்கான நிலை என்பதால், நம் மனம் மூலம் அதிமனம் செல்லும் நிலை. அப்போது INDIVIDUALITY என்னும் தனித்தன்மை என்னும் நிலைக்கு கொண்டு வருகிறது. அதன் மூலம் நமக்கான REAL IDEA வெளிப்பட இடம் கொடுக்கிறோம். THY WILL நிறைவேற இடம் தருகிறோம்.

என் வாழ்வில் 2007இல் பொருள் புரியாமல் token act என்று ஒரு பண்பை எடுத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் perfection - செம்மையை அதன் முழுமையை கொண்டு வர முயன்றதே, இன்றைய என் தொழில் ஞானம், தொழில் வளர்ச்சியாக வெளிப்பட்டது என்று நினைக்கிறேன். இது வெறும் படிப்பால் பெற்ற ஞானம்

அல்ல. இந்த SUBJECT ஐ படித்தவர்கள் இந்த ஞானத்தை பெறவில்லை. இறைவன் விரும்பும் பண்புகள் மேல் வந்த ஆர்வத்தில் வந்த ஞானம்.

நான் மட்டுமல்ல அந்த தொழிலின் சூழல், அதாவது 5G என்னும் அந்த TECHNOLOGY -யும் அதை தொடர்ந்து electronic FIELD ம் வளர்ந்தது. SRIPERUMPUDUR என்னும் சிறு ஊர், தொழில் நகரமாக வளர்ந்தது. இதற்கு வித்திட்டது Karmayogi என்னும் போது அவர் விரும்பிய பண்புகளை நான் தொட்ட போது நிகழ்ந்தது இது. நான் அவரை விட்டு பிரிந்து இருந்தாலும் அவரின் ஒரு பண்பில் ஒருமையை காண நான் முயன்றதன் விளைவு அது. சமுதாய தாக்கத்தில், வியாபார முறைகளில் இருந்து வெளியே வந்து, நான் கண்ட ஒருமையின் பலன் அது. இதை அந்த கால கட்டத்தில் நடந்த ஒரு உதாரணம் மூலம் புரிய வைக்க நினைக்கிறேன் .

ஒரு முறை "பிடியை விடுதல்" என்னும் பண்பை Token act ஆக எடுத்துக் கொண்டேன். என் தொழிலுக்கு நேரடி போட்டியாளர் ஒருவர் இருந்தார். அவரால் எனக்கு கிடைக்கும் விலை எப்போதும் குறைக்கப்படும். ஒரு நாள் அவர் போட்டிக்காக ஒரு project -ஐ எடுத்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பொருளை வைத்து சரியாக செய்யத் தெரியாமல் சுமார் 10 லட்சம் நஷ்டமடையக்கூடும் என்னும் நிலையில் இருந்தார். அது நோக்கியா ப்ராஜெக்ட் என்பதால் பெரும்பாலோனோர் பார்வை அதன் மேல் இருந்தது. என் manager மற்றும் நலம் விரும்பிகள் இது நல்ல சந்தர்ப்பம். அவருடைய project -ஐ நாம் எடுத்து செய்வோம் என்றனர். ஆனால் நான் பிடியை விடுதல் என்ற கொள்கையால், தொழில் ரகசியத்தை எதிரியிடம் சொல் என்னும் அகந்தையை அழிக்கும் ஒரு வழியைப் பின் பற்றி அதை சரியாக எப்படி செய்வது என்று சொல்லித் தந்தேன். அதன் மூலம் அவர் நஷ்டத்தில் இருந்து தப்பித்தார். அன்றிலிருந்து இன்றுவரை கடந்த பதினைந்து வருடமாக நான் போகும் project களுக்கு அவர் செல்வதில்லை. அதனால் எனக்கு விலை அதிகமாக கிடைக்க ஆரம்பித்தது. லாபமும் அதிகமானது.

ஆனால் இதே பிடியை விடுதல் என்னும் பண்பை வேறு ஒரு இடத்தில் செய்தேன். நான் பல முறை எழுதிய பேசிய மதுரை Branch Manager உதாரணம். ( பலருக்கும் நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன்). அவருக்கு தொழில் ரகசியம், செய்யும் முறை, எல்லாம் சொன்ன பிறகு அவர் தனித் தொழில் ஆரம்பித்து எனக்கு எதிராக சென்றதால் நான் நஷ்டமடைந்து மதுரை கிளையையே மூட வேண்டியதாயிற்று.

இன்னொருமுறை X என்னும் நண்பர் ஒருவர் எனக்கு பணம் வெகு நாட்களாக பாக்கி வைத்து இருந்தார். இன்னொரு நண்பர் Y என்பவர் X க்கு பணம் தர வேண்டும். நான் தராதே என்று சொன்னாலோ, எனக்குத் தந்து விட்டு X ன்

கணக்கில் கழித்து விடு என்று சொன்னாலோ கேட்கக்கூடியவர். ஆனால் இங்கும் பிடியை விடுதல் என்னும் பண்பால், நீங்கள் X க்கு கொடுங்கள். அவர் எனக்கு கொடுக்கட்டும் என்றேன். அதன்படி Y என்பவர் X க்கு கொடுத்தவுடன் X எனக்கு அப்படியே தரவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக தான் தந்தார். மிகுந்த சிரமப்பட்டு தான் வாங்க வேண்டி இருந்தது .

இந்த மூன்று அனுபவங்களின் சாரமாக எனக்கு புரிந்தது பண்பை அதன் பார்வையில் அதன் நோக்கத்தின் அடிப்படியில் சித்தம் உயர்வு பெற பரிணாமத்தில் முன்னேற செய்யவேண்டும் என்பதுதான்.

அதாவது அதிமனதின் முதல் நிலை பிரிக்க முடியாத ஒருமை. இரண்டாவது நிலையில் ஒன்றில் இருந்து பலவற்றை வெளிப்பட செய்து பலவற்றில் இருக்கும் ஒன்றை உணர தேவையான மாற்றத்தை ஏற்படுத்திய மனம். அதாவது பிரிவினைக்குள் ஒருமையை உணரும்  நிலை. அதற்கு அடுத்த நிலையில் தனித்தனி படைப்புகள், தனித்தனி உருவங்கள், தனித்தனி அம்சங்கள், தனித்தனி சுபாவங்கள் என்று பிரிந்து, நம்மை நம் அகந்தையை மட்டுமே அறிந்து - அதன் ஆனந்தமே வாழ்வின் ஆனந்தம் என்னும் அறியாமையை ஏற்படுத்தி - பின் பாடங்களை கற்று  -ஞானம் பெற்று - சித்தத்தில் உயர்ந்து - பரிணாமத்தில் வளர்வது மூன்றாம் நிலை.

சற்று முன் கூறிய உதாரணத்தில் பண்பை, பிடியை விடுதல் என்னும் பண்பை நேரடியாக - அதன் சத்தியத்தை உணர்ந்து  உண்மையை உணர்ந்து ஏற்றுக் கொண்ட ஒரு நிலை.  அது பல மடங்கு பலித்து இன்று வரை தொடர்கிறது.  எனக்கு மட்டுமல்ல அது என் மனைவிக்கும் ஆனந்தம் தரும் அளவிற்கு அமைந்தது. நாங்கள் தினமும் நடைபயிற்சி முடிந்து ASHOK NAGAR சரவண பவனில் காபி சாப்பிடுவது வழக்கும்.  அப்போது சில நேரங்களில் அந்த கான்ட்ராக்டரும் வருவார். பெரும்பாலும் நான் காபி டோக்கன் வாங்கும் நேரத்தில் என் மனைவி தனியாக அமர்ந்திருப்பார். அப்போது அவர் என் மனைவியை பார்த்து வைக்கும் வணக்கம் அவளுக்கு மிகப்பெரிய ஆனந்தம். காரணம் அப்போது இருக்கும் கூட்டம் மொத்தமும் யாரோ VIP என்னும் அளவிற்கு என் மனைவியை திரும்பிப் பார்க்கும்.

அது போல இரண்டாவது உதாரணம் எனக்கு பண்புகள் மேல் நம்பிக்கை வைத்து செய்தாலும் எனக்கு அதன் மேல் இருக்கும் CONTROL ளிலும் நம்பிக்கை இருந்தது. அதாவது இறைவனை, பண்பை நம்பிய அதே அளவு என்னையும் நம்பினேன். அதனால் பலன் முழுதுமாக கிடைத்தாலும் அதன் மூலம் நான் எதிர்பார்த்த ஆனந்தத்தை அது தரவில்லை.

மூன்றாவது அனுபவம் பண்பு தான் என்றாலும் உண்மையில் அது என் இயலாமை அல்லது நான் நல்லவன்  ஒளிவு மறைவு இல்லாதவன் என்பதற்காகவே, அன்னை அன்பன் என்பற்றைக்காகவே செய்தது. அது துன்பத்தை கொடுத்தது. பாடம் கற்றுக் கொண்ட பின் மனமாற்றம், கடந்த கால சமர்ப்பணம் போன்ற அதற்கான ஒருமைக்கான உயர் பண்புகள் பெற்ற போதே  ஏறத்தாழ மூன்று வருடம் கழித்து மாறியது. இதை இன்னும் ஆழ ஆராய்ந்து பார்த்தால் அதிமனம் - SUPERMIND என்பது எங்கோ இருப்பது அல்ல நம் மனதின் ஒரு நிலை தான். நம் மனம் உயர்சித்ததை எட்ட நினைக்கும் போது அதை வெளிப்படுத்தும் போது அது சத்திய சித்தமாகிறது. அதன் சித்தம் நம் வாழ்வில் வெளிப்படுகிறது. இந்த நிலையில் நம் தனிப்பட்ட, எண்ணம், உணர்வு, நோக்கம் ,சுபாவம் வெளிப்படவில்லை. இந்நிலையை தொகுத்தறியும் சித்தம் என்று எடுத்துக் கொள்ளலாம். அதை வெளிப்படுத்த நாம் எடுக்கும் முயற்சிகள், நம் பிரிவினைக்கான மனப்பான்மை புரிந்த பிறகும் அதை புறந்தள்ளி, இறைவனுக்கான ஒருமையை வெளிப்படுத்தும், பண்பை வெளிப்படுத்தும், ஞானத்தை, பகுத்தறியும் சித்தம் என்று எடுத்துக் கொள்ளலாம்.

இதை நம்மை அன்னையோடு பொருத்தி பார்க்க வேண்டும் என்றால், நாமே அன்னை என்னும் மனநிலையை பெறுவது முதல் நிலை. நம்முள் அன்னை இருக்கிறார் என்று உணர்வது - அதாவது நமக்கும் அன்னைக்கும் ஒரு சிறு வேறுபாடு இருக்கிறது என்றாலும் அவர் என்னுள் இருக்கிறார் என்று உணர்வது இரண்டாவது நிலை. அதாவது அன்னையை பற்றி மறவாத நிலை. இந்த இரண்டிலுமே நாம் அன்னையின் விருப்பத்தை ஓரளவு நிறைவேற்றுகிறோம். மூன்றாவது நிலை அன்னையை பற்றிய நினைவு இருந்தாலும், பல காரணங்களால் நம் சுபாவம், நம் விருப்பம், என்று நடக்கிறோம். அது ஒரு பிரச்சினையை, முரண்பாட்டைக் கொண்டு வரும் போது நம் மனம் அன்னையை நோக்கித் திரும்புகிறது. இது மூன்றாவது நிலை.

மனநிலையில், சித்தத்தில் நாம் உயர வேண்டும் என்பதே நமக்கு விதிக்கப்பட்ட விதி, இறைவனின் சட்டம். நம் கடந்த இருபது, முப்பது ஆண்டு வாழ்வை திரும்பிப் பார்த்து நிதானமாக ஆராய்ந்தால், அப்படி நாம் உயர்பண்புகளை, உயர் நோக்கங்களை ஏற்றுக் கொண்ட இடங்களே நமக்கு நிரந்தர ஆனந்தத்தை தந்து இருக்கிறது. மற்றவை எல்லாம் அப்போதைக்கு ஆனந்தம் தந்தது போல இருந்தாலும் பிற்காலத்தில் அதுவே துன்பத்திற்கு அடித்தளமாக அமைந்து இருப்பதைக் காண முடியும். அப்படி ஒரு நிலை வராமல், எப்போதும் அன்னையை நோக்கிய நம் பார்வை, நம்மை அதிமனதின் மூன்றாம் பரிமாணத்தில் வைக்கும். அன்னையின் கருத்துகளையும், அன்னைக்கு ஏற்ற உணர்வுகளையும், அன்னை ஏற்றுக் கொள்ளும் பழக்கங்களையும், அதற்கான சட்டங்களையும் புரிந்து

தெளிந்து பின்பற்ற தேவையான இடையறாத ஆர்வம் நம்மை குறைந்த பட்சம் அந்த மூன்றாம் நிலையில் இருக்க வைக்கும்.

அன்னையை வைத்து நான் சொன்ன இந்த விளக்கத்தை ஐக்கியம், முரண்பாடு, அஞ்ஞானம் தெளிவு பெரும் நிலை என்று வேறு மூன்றாகவும் விளக்குகிறார் கர்மயோகி.  வாழ்வில் மனம் அதிமனமாக வெளிப்பட இந்த நிலைகளையும் பொருத்தி பார்க்கலாம். ஐக்கியம் என்றும் ஒருமை என்றும் நான் கூறுவது - நானே இறைவன் என்று நினைப்பது. இதை எப்படி வெளிப்படுத்தலாம் என்றால் இறைவன் நம்மிடம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமோ அப்படி நாம் மற்றவரிடம் நடந்துக் கொள்வது. உதாரணமாக அன்னை, நாம் என்ன தவறு செய்தாலும், அவருக்கு பிடிக்காததை  செய்தாலும், அன்னை நம்மை மன்னித்து விட வேண்டும், கண்டுக் கொள்ளக் கூடாது, கேட்பதையெல்லாம் கொடுத்து விட வேண்டும். எப்போதும் நம்மை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும், பாதுகாத்துக் கொண்டே இருக்க வேண்டும்,  நாம் எவ்வளவு சுயநலமாக , கயமையுடன் நடந்து கொண்டாலும் பொருட்படுத்த கூடாது என்றெல்லாம் எதிர்பார்ப்போம். அப்படி நாம் பிறரிடம் இருப்பது - நாமே அன்னை என்று உணர்ந்து வெளிப்படுத்துவது.

இரண்டாவது நிலையான முரண்பாடு என்பதே எப்போது வரும் என்றால் நல்லது, கெட்டது, உயர்ந்தது, தாழ்ந்தது என்று இரண்டும் தெரிந்து ஏதாவது ஒன்றை ஏற்றுக் கொள்ள முடியாத அல்லது நடக்காத நிலை, அந்த நிலையில் உயர்ந்ததை மட்டும் ஏற்றுக் கொள்ளுதல், நாம் அன்னை அன்பர், நம்முள் அன்னை இருக்கிறார் என்னும் பார்வையில் ஏற்றுக் கொள்ளுதல் இரண்டாம் நிலை.

எது சரி, எது தவறு என்று தெரியாமல், ஜடமாக, பழக்கத்தில், விருப்பத்தில் செய்யும் செயல்கள். அது அஞ்ஞான நிலை. அதில் முன்னேற்றமில்லை என்று புரிந்து எது சரி, எது உயர்ந்தது என்று தெளிவு பெற்று அதன் பார்வையில் பார்ப்பது மூன்றாம் நிலை என்று நடைமுறைக்காக பிரித்தும் பார்க்கலாம்.

இந்த உதாரணங்கள் எல்லாம் கர்மயோகியின் எழுத்துக்களை நான் புரிந்துக் கொண்ட விதம். இது சரியா, தவறா என்று தெரியாது என்றாலும் தத்துவமாகவே பேசி, அதனாலேயே ஏதோ ஓர் ஆன்மீக உயர்வு பெற்றுவிட்டதாக நினைப்பதை விட - அதை பற்றி SPIRITUAL EGO என்று தனியாக கட்டுரைகள் எழுதி இருக்கிறார்- நடைமுறையில் எங்காவது ஆரம்பிக்க முடியுமா  என்னும் தேடலின் விளைவு இது.

இதை சொல்லக் காரணம் , பன்னிரெண்டு  ஆண்டுகளுக்கு முன் கர்மயோகி என்னை மையங்களில் பேச சொன்ன போது ஒரு மையம் நான் LIFE DIVINE

கருத்துக்களை மாற்றி பேசுகிறேன் நீர்த்துப்போக செய்கிறேன், கொச்சை தமிழில் பேசுகிறேன் என்று கூறி ஒரே சொற்பொழிவுடன் நிறுத்தி விட்டது. உண்மையில் நான் அப்போது பேசியது மனித சுபாவம், மற்றும் நூறு பேர்கள் போன்ற புத்தகங்களின் கருத்துக்களையே. அப்போது Life Divine பற்றி எனக்கு எதுவும் தெரியாது, இப்போது மட்டும் தெரியுமா என்று கேட்க வேண்டாம். தெரிந்துக் கொள்ள முயன்று கொண்டு இருக்கிறேன். ஆனால் நான் கற்றதை, நான் பெற்றதை, தரவேண்டும் என்ற ஆர்வம் மட்டும் இருந்தது. அதுவே அதிமனம் செயல்படும் இடம். அது எப்படி நடந்தது என்றால், நான் பேசிய பேச்சு சரி இல்லை என்று ஒரு CD யில் RECORD செய்து கர்மயோகி அவர்களுக்கு proof ஆக அனுப்பப்பட்டது. அதை முழுதும் கேட்ட அவர், எனக்கு ஒரு MAIL எழுதினர். I FULLY ENDORSE YOUR VIEWS . உன் பார்வை எனக்கு முழுக்க சம்மதம். இதை மற்ற மையங்களிலும் நீ பேச வேண்டும் என்றார். அவர்கள் அனுப்ப வில்லை என்றால் என் சொற்பொழிவை அவர் கேட்கும் வாய்ப்பே வந்து இருக்காது. அதாவது உயர்ந்ததை நோக்கிய உங்கள் பார்வை சரியாக இருந்தால், அதுவே உங்களை அந்த உயர்ந்ததுடன் சேர்த்து வைக்கும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இந்த உதாரணங்களை வைத்து பார்க்கும் போது இந்த அத்தியாயத்தை வேறு ஒரு கோணத்தில் பார்க்க முடியும். எதை படைக்க வேண்டும் என்றாலும் ஒரு idea தேவை. அந்த idea ஒரு CREATOR க்கு அதாவது உருவாக்குபவருக்கு வந்தால் தான் அதை படைக்க முடியும். அதை வெளிப்படுத்த ஒரு உலகம் வேண்டும். அதை மட்டுமே செய்யக் கூடிய உறுதியும் அதற்கான ஞானமும் வேண்டும். இதுவும் அதிமனதின் மூன்று நிலைகளை நம்முள் மனதளவில் புரிந்துக் கொள்ள கூடிய நிலை. இதை அனைத்தையும் நிர்ணயிக்க கூடியது அதிமனம், supermind , TRUTH CONSCIOUSNESS- சத்திய சித்தம், MOTHER - அன்னை என்று எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு அதனை நோக்கிய நம் மனதை, அகந்தையை திருப்புவது மூன்றாம் நிலை.

இதை ஒரு வியாபாரி, தொழிலதிபர், என்னும் பார்வையிலும் பார்க்க முடியும். முதல் நிலை customer - வாடிக்கையாளர் அல்லது உபயோகிப்பாளர். அவருக்காகத் தான் ஒரு வியாபாரியின், தொழிலதிபரின் விஷயங்களும் நடக்க வேண்டும். அவர் விருப்பம், IDEA , தேவை, நோக்கங்கள் வியாபாரத்தில் தொழிலில் வெளிப்பட வேண்டும். இதை அதிமனதின் முதல் பரிமாணத்திற்கு ஒப்பிடலாம். அதன் பின் அதை தயாரிக்க தேவையான product ஆக , ஒரு வடிவமாக , தான் நினைத்ததை வெளிப்படும் விதமாக , அதன் மூலம் தான் அனுபவிக்க நினைத்த ஆனந்தத்தை பெற மார்க்கெட் மற்றும் ஐடியா இரண்டையும் ஒருங்கிணைக்கும் ஒரு நிலை இருப்பது இரண்டாம் பரிமாணத்திற்கு உதாரணமாக, தொகுத்தறியும் சித்தத்திற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். பின் அதை வெளிப்படுத்தி,

சந்தைப்படுத்தி அந்த நோக்கம், அந்த பொருள் வெளிப்பட தேவையான மார்க்கெட் பிரபஞ்சம். அதை எப்படி, எந்த அளவில் எந்த இடத்தில் வெளிப்படுத்தினால், நோக்கம் நிறைவேறும் என பார்த்து அதை வெளிப்படுத்துவது, செய்வது பகுத்தறியும் சித்தத்திற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

இதில் பெரும்பாலும் நடப்பது என்னவென்றால், தயாரிப்பாளர், தொழில் அதிபர் தனக்குத் தெரிந்த ஒரு பொருளை, தயாரிப்பதாக திட்டம் போட்டு, தன் இஷ்டத்திற்கு செய்வார். அது சிறந்ததாக கூட இருக்கலாம். ஆனால் அது அவர் விருப்பம், அவர் அபிப்ராயம். அவர் எண்ணம். CUSTOMER -ஐ பற்றிய தெளிவு, ஞானம், அவர் தேவை தான் market ஐ நிர்ணயிக்கிறது, அதை ஒட்டி தொழில் இல்லையென்றால், தொழிலால் நஷ்டம் வரும், துன்பம் வரும் என்ற ஞானம் இல்லாமல் செயல்படும் போது அடிமேல் அடி விழுந்து பாடம் கற்றுக் கொண்டு CUSTOMER ரின் பார்வையில் CUSTOMER ரின் நோக்கத்தை ஒட்டி, அவரின் idea வை ஒட்டி ஒன்றை செய்யவில்லையென்றால் அது முன்னேற்றத்தை தராது என்ற ஞானத்தை பெற்று, அதன் பின் நம் எண்ணம், உணர்வு, செயல், அனைத்தையும் CUSTOMER ஐ நோக்கியே இருக்கும் நிலை அதிமனதின் மூன்றாவது நிலைக்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

அதாவது ஒரு தொழிலதிபர், businessman CUSTOMER ரின் idea வை மட்டுமே ஏற்றுக் கொண்டு, அந்த CUSTOMER ஏ நான் தான் என்னும் அளவிற்கு ஒன்றி - ஒரு செயலை செய்தால், அவரை பரமாத்மாவுக்கு ஒப்பிடலாம். அவர் பெரும் படைப்பாற்றல் இறைவனுடையது. Steve jobs  அதற்கு உதாரணம். தன்னை முதல் CUTOMER ஆக நினைத்து அவர் செய்தது அனைத்தையும் அவருடைய வாழ்க்கை வரலாற்றை படித்தால் புரிந்துக் கொள்ள முடியும். அப்படி இல்லாமல் நான் ஒரு business man என்ற நினைவும் இருந்து customer பற்றிய அனைத்து ஞானமும் இருந்தால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனநிலையில் இருந்தால், அந்த மனநிலையை ஜீவாத்மாவிற்கு ஒப்பிடலாம். இவை இரண்டும் இல்லாமல் தான் நினைத்ததை செய்து customer இதைத் தான் விரும்புவார் என்று நினைத்து செய்து - பின் தான் இருப்பதே  customer ஆல் தான், customer தான் அனைத்தையும் நிர்ணயிக்கும் நிலையில் இருக்கிறார் என்று புரிந்து அதன் பிறகு customer க்கு தன் பார்வையை திருப்பி அவர் IDEA வெளிப்பட தொழில் செய்பவர் மூன்றாம் நிலை.  இது அகந்தை அல்லது தனித்தன்மை. இப்படி ஏராளமான உதாரணங்களை சொல்ல முடியும்.

முன்பு சொன்னது போல இது சரியா, தவறா என்று தெரியாது. ஏதாவது புரியுமா, செய்ய முடியுமா, அதன் மூலம் ஆனந்தம் கிடைக்குமா என்று கேள்வி வந்தால் எதனுடனும் பொருத்தி பார்த்து புரிந்துக் கொள்ள முடியும்.

நமக்கு சித்தத்தில், வாழ்வில், மனப்பான்மையில் , முன்னேற்றம் தந்தால் அது சரி. இல்லையென்றால் அது தவறு என்ற நிலைக்காவது வந்தால் போதும் என்பது என் ஆர்வத்திற்கு, சிந்தனைக்கு அடிப்படை. அப்படி இன்னும் பல பரிமாணங்களிலும் அதை பொருத்தி பார்க்க முடியும். அதை ஒரு பயிற்சியாக செய்து பார்த்து சிந்தித்து பார்த்து புரிந்துக் கொள்வதற்கு வசதியாக நான் சிந்தித்த மேலும் சிலவற்றை தருகிறேன். எவ்வளவு அபத்தமாக இருந்தாலும் பரவாயில்லை சிந்தித்து பாருங்கள். எனக்கு share செய்ய விருப்பம் உள்ளவர்கள் செய்யுங்கள்.

1. எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் நிலை- எதிர்ப்பு - சமாதானம் HARMONY அல்ல - COMPROMISING - என்னும் மூன்று நிலை

2. சாதகன் - சந்நியாசி – குடும்பஸ்தன் - என்னும் மூன்று நிலை

3. முழுமை Holistic - POSITIVE - NEGATIVE - என்னும் மூன்று நிலை

இது போன்று பல விஷயங்களை - முயன்றால் - மூன்று மூன்றாகப் பிரித்து பார்த்து நம்மால் இந்த அத்தியாயத்தை புரிந்து கொள்ள முடியும்.

இதில் ACCOMPLISHMENT - சாதனை என்ற பார்வையில் பார்ப்போம். அதை ASPIRATION - AMBITION - DISTRACTION என்பதை பரமாத்மா, ஜீவாத்மா, அகந்தை என்பதற்கு இணையாக எடுத்துக் கொண்டு பார்க்க முடியும். இதில் ASPIRATION - ஆர்வம் என்பது அடிப்படையில் படைப்பாற்றல் கொண்டதாக இருக்கிறது. ஆர்வத்தை அடிப்படையாக கொண்டவை மட்டுமே ஞானத்தை தருகிறது. மற்ற அனைத்தும் ஜடமாக செயல்பட வைப்பதை நாம் நம் செயல்களை சற்று கவனித்தாலே புரிந்துக் கொள்ள முடியும்.

LIFE IS ASPIRATION ON THE MOVE என்று அருமையாக குறிப்பிடுகிறார் கர்மயோகி. நம் ஆர்வம் செயல் படுத்த படுவதே நம் வாழ்க்கை என்று குறிப்பிடுகிறார். அதற்கு அடுத்த படியாக AMBITION என்பதை பொதுவாக லட்சியம் என்று சொன்னாலும் அது பொதுவாக வெற்றி, சாதனை என்று நினைக்கும் ஒரு இலக்கு என்றே நடைமுறையில் இருக்கிறது. அந்த நிலையில் நாம் இருக்கும் போது அது ஆர்வத்தை நினைவில் கொண்டாலும் - அதன் வழிகளை, சட்டங்களை, ஆராய்ந்து தொகுத்தறியும் சித்தமாகவும் - அதை எப்படி வெளிப்படுத்தினால் ஆனந்தம் அடைய முடியும் என்று பகுத்தறியும் சித்தமாகவும் மாறுகிறது. அப்போது நாம் நாம் அடைய நினைத்த ஆனந்தத்தை முன் நின்று நடத்த வேண்டும், என்பது மாறி LEADING FROM FRONT என்பது மாறி, ஆர்வத்தை manage செய்கிறோம் என்ற நிலைக்கு இறங்கி வந்து விடுகிறோம். ஆர்வத்திற்கு தேவையான பண்புகள்

மறந்துவிடுகிறது. நாம் நம் திறமை, திறன், ஆகியவற்றைப் பயன்படுத்தி, அவற்றை பண்புகள் என்று நினைத்து பெற நினைக்கிறோம்.  அங்கு எது தேவை, எது தேவையில்லை என்னும் பிரிவினை வந்து விடுகிறது. அது DISTRACITON  - ஆர்வத்தையொட்டிய  பார்வையில் இருந்து நம்மை திருப்புகிறது. அது துன்பத்தை தோல்வியை தரும் போது, அல்லது நாம் நினைத்தை தராத போது தான் நாம் மீண்டும் ஆர்வத்தை நினைக்கிறோம். எதற்காக இந்த வேலையை செய்து கொண்டு இருக்கிறோம் என்னும் நினைவு வருகிறது. அதை நோக்கி நம் பார்வையை திருப்பும் போது நம் வாழ்வு மாறுகிறது.

இதை வாழ்வில் சற்று கவனித்து பார்த்தால் புரியும். உதாரணமாக தற்போது என் MARKET தமிழ்நாடு மற்றும் BANGALORE  - நான் மேலும் வளர வேண்டும் என்னும் ஆர்வம் எனக்கு அதிகமாக இருக்கிறது.. அப்படியானால் நான் வட இந்திய தொழிற்பேட்டைகளுக்குச் செல்ல வேண்டும். அதற்கு காட்டாயம் எனக்கு ஹிந்தி பேச தெரிய வேண்டும்.  என்ன காரணத்தாலோ - எல்லாவற்றையும் சற்று சிரமப்பட்டு சிரத்தை எடுத்து தெரிந்துகொள்ளும் எனக்கு - ஹிந்தி என்றால் மட்டும்  பிடிப்பதில்லை. அதனால் ஏதோ ஒன்றை சொல்லி தவிர்க்கிறேன். உண்மையில் நான் எதை தவிர்க்கிறேனோ அதுவே என்னை ,என் முன்னேற்றத்தை கட்டுப்படுத்துகிறது என்பதை நான் அறிவதில்லை.  அது அடுத்த கட்டத்தில் வெறுப்பாக, பயமாக மாறுகிறது.  அது எனக்கு ஒரு INCAPACITY ஐ திறமைக்குறைவை உருவாக்குகிறது. என் படைப்பாற்றலில்  இருந்து, இது போன்ற ஒன்றை ஏற்கனவே படைத்து இருந்தும் கூட இப்போது கீழே இறங்குவது எனக்குத் தெரிவதில்லை. அது சரி என்றே தோன்றுகிறது. அந்த இயலாமை பல சமயங்களில் கோபமாக வெளிப்படுகிறது. பிறரை சார்ந்து இருக்க வைக்கிறது. அதாவது வாழ்வை - ஆன்மாவின் திறமையால்- ஆர்வத்திற்கு தேவையானதை கட்டுப்படுத்தாமல் - கோபத்தால் -அகந்தையின் திறமையால்- கட்டுப்படுத்த நினைக்கிறேன். ஏறத்தாழ தன்னை காப்பாற்றிக் கொள்ள நாய், ஆடு, மாடு செய்வதை நான் மனிதன் என்ற போர்வையில் செய்கிறேன். அதாவது மனிதனில் இருந்து விலங்காக இறங்குகிறேன். அதில் பிரச்சினை வந்த பிறகு சுமுகக்குறைவு புரிந்த பிறகு சுமுகத்தின் தேவை புரிகிறது. அதாவது ஆன்மாவின் பண்பை நோக்கி என் அகந்தை திரும்புகிறது. அப்போது என் ஆர்வம் நிறைவேற தேவையான பண்புகள் புரிகிறது. என் REAL IDEA பலிக்கிறது. எப்போதும் கோபம், எரிச்சல் சந்தோஷம் என்று உணர்ச்சிகளில் மூழ்கும் இடங்களை வெளியே வந்த பிறகு ஆராய்ந்து பார்த்தால் நாம் நம் ஆர்வம், லட்சியம், நோக்கம் ஆகியவற்றில் இருந்து எவ்வளவு விலகி இருக்கிறோம் என்று தெரியும்.  இறைவன், அன்னை, சத்திய சித்தம் என்று நமக்கு தெரிந்த அனைத்தில் இருந்தும் நம் பார்வை விலகிவிட்டது தெரியும்.

அப்படி இல்லாமல் எப்போதும் அவைகளை நோக்கி நம் பார்வை நம்மை இறைவனாக்கும். இறைவன் விரும்பிய ஆனந்தத்தை தரும். இரண்டாம் நிலையில், பிரிவு ஏற்படும் போது நாம் செய்யும் இன்னொரு தவறு நாம் செய்யும் ஒப்பீடுகள். COMPARISONS , நாம் இன்னொரு நாம் அறிந்த நல்லவர், பண்பாளர் அல்லது சாதனை என்று நாம் நினைப்பது ஆகியவற்றுடன் ஒப்பிட்டு நம்மை முன்னேற்ற நினைக்கிறோம். அதற்காக நம்மை மாற்றிக் கொள்ள நினைக்கிறோம். நல்லதே ஆனாலும், நிமிடத்திற்கு ஒரு முறை அல்லது அடிக்கடி மாறுவது பண்பல்ல. உயர்சித்தம் அல்ல. நம் ஆர்வம், அதை அடையும் முறை, நான் பெற நினைத்த ஆனந்தம்  ஆகியவற்றை முடிவு செய்த பிறகு ஒரு உயர்சித்தம் அடைய வேண்டிய முடிவு எடுத்த பிறகு அதனுடன் நம்மை ஒப்பிடுவதே சரியாக இருக்கும். எப்போதும் அதை நோக்கிய பார்வையே நம்மை அந்த இடத்திற்கு கொண்டு செல்லும். நம்முள்ளேயே அறியும் ஞானம் இருக்கிறது. செயல்படும் சக்தி இருக்கிறது. இந்த இரண்டுக்கும் முரண்பாடு இல்லாத நிலையே இறைவன் விரும்பும் ஆனந்தம். இந்த சத்தியம் புரிந்தால், அதற்கான சித்தத்தை பெற முடிந்தால், நாம் அகந்தை, ஜீவாத்மா, பரமாத்மா என்னும் நிலைகளை மனதளவில் புரிந்துக் கொள்ள முடியும். ஓரளவு செய்து பார்க்க முடியும்.

ஆனால் நாம் செய்வது நம்மை சுற்றியுள்ளவர்கள், சூழல், சமுதாயம் ஆகியவற்றை வைத்து மொத்த பிரபஞ்சத்தையும் புரிந்துக் கொள்ள நினைக்கிறோம். அதாவது ஒரு 10% தெரிந்துக் கொண்டு மீதி 90% ஐ முடிவு செய்கிறோம். முழுமையை நோக்கிய பார்வை நமக்கு இல்லை. எனக்கு போலீஸ், வக்கீல் என்று நிறைய பேரைத் தெரியும். அவர்களில் 99% பேர்களுக்கு நல்லது, பண்புகள் மேல் நம்பிக்கை கிடையாது. காரணம் அவர்கள் , அவர்கள் தொழிலில், வாழ்வில் நல்லவர்களை, பண்பானவர்களை பார்ப்பது மிகவும் குறைவு. அது போன்று தான் நாம். நம் சாதனையை அதனை ஒட்டிய பார்வை நம்மைச் சுற்றியுள்ள சமுதாயம், நடப்பு ஆகியவற்றை வைத்து முடிவு செய்கிறோம். அப்படி இல்லாமல் ஆர்வத்தின் பார்வையில் அனைத்தையும் பார்த்தால் எவ்வளவு opportunities நம்மை சுற்றி உள்ளது என்பது புரியும். நாம் தான் பயன்படுத்தாமல் அதற்கான பகுத்தறியும் சித்தம், தொகுத்தறியும் சித்தம் இல்லாமல் அகந்தையிலிருப்பது புரியும். அதை தனித்தன்மை என்று கூறிக் கொள்வதும் புரியும். இவற்றில் இருந்து வெளியே வந்து பார்த்தால், நம் அதிமனதின் பண்புகள் என்று தெரிந்துக் கொண்டவையே மனவளர்ச்சி, சித்த உயர்வுக்கான விஷயங்களே - அனைத்தையும் முடிவு செய்கின்றன என்பது புரியும். நம் அறிவு அல்ல, நம் பார்வை தான் அனைத்தையும் முடிவு செய்கிறது என்பது புரியும். நாம் வெற்றி பெற்றவர்களை சற்றே ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் வெற்றி பெற்றதற்கான காரணம் அவர்களின் அறிவு அல்ல,

அவர்களின் பார்வை, அவர்கள்  செல்ல வேண்டிய திசைக்கான தெளிவு இருந்து இருப்பது தெரியும்.

நான் பலமுறை லஞ்சம் பற்றிய உதாரணத்தை கூறியிருக்கிறேன் என்றாலும் அதைத் தவிர அனைவருக்கும் தெரிந்த உதாரணம் எனக்குத் தெரியாததால் அதையே மீண்டும் கூறுகிறேன். முதலில் சமுதாயத்தில் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்று கூறுகிறோம். சமுதாயமே லஞ்சம் என்று நினைக்கிறோம். அது பகுதி. உண்மையில் அதை ஆராய்ந்து பார்த்தால் உண்மையில் சமுதாயம் லஞ்சத்தை ஆதரிக்கவில்லை, அதை சட்ட விரோதம் என்று சொல்கிறது. அதை செய்பவர்களுக்கு தண்டனை என்றே சொல்கிறது. அது முழுமை.

ஆனால் அந்த ஞானத்தை பெறாமல் நாம் பகுதியை முழுமையாக நினைக்கிறோம். அதே போல லஞ்சம் தரும் நிலை வந்தால் - நமக்குத் தெரிந்த சட்டங்களை எடுத்துக் கொள்வோம். எனக்குள்ளே இல்லாமல் வராது, நான் விரும்புகிறேன், அதனால் தரவேண்டி இருக்கிறது என்று எடுத்துக் கொள்வோம். அல்லது அவரிடத்தில் நான் இருந்தால் நானும் இதையே செய்திருப்பேன் என்று அடக்கமாக சொல்லிக் கொள்வோம். இந்த மூன்றையும் கவனித்தால் தான் நம்மை சற்றே உயர்த்தி, பண்புகளில் கூட நம்மை சற்றே உயர்த்தி மற்றவர்களை தாழ்த்தி பார்க்கும் ஒருமை புரியும்.

உண்மையில்  பார்க்க வேண்டிய முறை என்றால் - நான் லஞ்சம் கொடுத்து சாதிக்க நினைப்பதை போல, நான் முன்னேற விரும்புவதைப் போல, நான் PROSPERITY -ஐ அடைய நினைப்பது போலவே அவரும் அடைய நினைக்கிறார் என்ற ஒருமையை உணர்வில் உணரும் போதே அந்த செயல் ACCOMPLISH ஆகிறது. இது ஒருமை மேல், ஐக்கியத்தின் நம் நம்பிக்கை என்றாலும் பண்பின் மேல் நம்பிக்கை என்றாலும் அது மூட நம்பிக்கை என்கிறார் கர்மயோகி.

காரணம் அது பகுதி.  லஞ்சம் தரக்கூடாது, என்னால் தரமுடியாது அது அன்னைக்கு, கர்மயோகிக்கு ஆகாது என்ற நம்பிக்கையே முழுமையின் நம்பிக்கை. பண்பின் முழுமை புரிவது ஆன்ம ஞானம். அந்த ஞானம் வாழ்வில் பிரதிபலிப்பது மட்டுமே நம்பிக்கை. மற்றது எல்லாம் மூட நம்பிக்கை. . இதற்கான சரியான தமிழ் சொற்கள் தெரியாததால் ஆங்கிலத்திலேயே தருகிறேன்.  அதுவே BELIEF , FAITH , TRUST , CERTITUDE என்று வளர்கிறது. அகந்தை, சமர்ப்பணம், சரணாகதி என்று செல்கிறது. ஜீவாத்மாவே பரமாத்மா என்னும் ஞானத்தைத் தருகிறது. மற்றவை எல்லாம் ஆசையின், எதிர்பார்ப்பின் அடிப்படை.  அது மூட நம்பிக்கை. சத்தியத்தை பற்றிய தெளிவின் அடிப்படையில் மட்டுமே இருப்பதே நம்பிக்கை.

அன்னை மேல், அவர் விரும்பும் பண்பின் மேல் இருப்பதே நம்பிக்கை. மற்ற அனைத்தும் மூட நம்பிக்கையே . அறியாமையே .

இன்று நம்மிடையே ஞானம், பக்தி என்று இருப்பது எல்லாம் ORGANIZED EMOTIONAL ENERGY . இல்லாத ஒரு RELATIONSHIP ஐ CORRESPONDENCE ஐ life response என்று நினைத்து நம்மை நாமே திருப்தி படுத்திக் கொள்கிறோம். அப்படி நாமிருப்பது புரிந்தால் - இறையுண்மையை நோக்கி நம் பார்வையை, ஆர்வத்தை திருப்பினால் பரிணாமத்தில் வளர, உயர்சித்ததை பெற முடியும். பகுதி முழுமை பற்றி ஒரு கட்டுரை எழுதிய போது வந்தவர்களை கர்மயோகி ஒரு முறை கவனித்தார். அவர்கள் பகுதியை முழுமையாக நினைத்ததை அதாவது மூட நம்பிக்கைகளை கவனித்தார். அவற்றில் சில -

ஒருவர் அவருக்கு வந்த KIDNEY STONE - சாப்பாட்டில் கல் அதிகம் சாப்பிட்டதால் வந்தது என்றார்.

ஞாபகசக்தி அதிகம் உள்ள ஒருவரை, புத்திசாலி, ஞானம் உள்ளவர் என்று ஒருவர் புரிந்துக் கொண்டார்

சரளமாக ஆங்கிலம் பேசிய ஒருவரை, அறிவாளி என்று ஒருவர் நினைத்தார்.

நல்ல நிறமாக இருந்த ஒருவரை - அழகாக இருக்கிறார் என்று மற்றொருவர் நினைத்தார்.

நன்றாக உரக்க பேசிய ஒருவரை தலைவர் தலைமை பண்பு கொண்டவர் என்று ஒருவர் கூறினார்.

பத்திரிகையில் வருபவை எல்லாம் உண்மை என்று ஒருவர் நம்பினார்

இவையெல்லாம் எந்த அளவு நகைப்பிற்குரியது என்று நாம் நினைக்கிறோமோ, அந்த அளவிற்கு, அல்லது அதே போலத்தான் நாமும் இருக்கிறோம் என்பதே உண்மை. அந்த நிலையில் இருந்து நாம் வெளியே வருவது அகந்தையில் இருந்து வெளியே வந்து முழுமையை நோக்கி நம்மைத் திருப்புவது.

இதை சுருக்கமாக சொல்வதானால் முதல் நிலையில் நான் என்னும் சிந்தனை, தனித்தன்மை, உருவம், சுபாவம், இயற்கை, இருப்பு என்று எதுவும் கிடையாது. எல்லாமே ஒன்று என்னும் நிலை. எல்லாமே இறைவன், அவர் லீலை என்னும் நிலை. சித்தத்திற்கும் சக்திக்கும் இருக்கும் வேறுபாட்டை கூட அறிய முடியாத நிலை.

இந்த ஞானத்தை அடிப்படையாக வைத்து, இருப்பை மட்டும் முன் வைத்து சத்திய சித்தத்தை மறவாத நிலை - ACT OF SELF DIVISION, KNOWLEDGE CENTRALISING ITSELF. இரண்டாவது TO STAND BACK AND OBSERVE ITSELF . நம்மை நமே பார்த்து கொள்ளும் ஒரு நிலை. அதாவது இதை நடைமுறை படுத்த நாம் ஏற்படுத்தும் ஒரு வித்தியாசம். ஒரு PRACTICAL DIFFERENTIATION என்று எடுத்துக் கொள்ளலாம்.

மூன்றாவது SPIRITUAL INDIVIDUAL . இந்த பிரிவினைகளை எல்லாம் உணர்ந்தாலும் - ஒருமையை பற்றிய, தன்னை பற்றிய, ஞானம் எப்போதும் எண்ணத்தில் தெளிவாக இருக்கும் நிலை VARIATION IN MIND WITH UNITY IN BACKGROUND என்று அதிமனதின் மூன்று பரிமாணங்களை சுருக்கமாகக் கூறி புரிந்துக் கொள்ள முடியும்.

இந்த அடிப்படையை புரிந்துக் கொண்டால் எந்த செயலையும், சூழலையும் அதிமனதின் பார்வையில் பார்த்து நம் நிலையை புரிந்துக் கொள்ள முடியும். சித்தத்தில் உயர செய்ய வேண்டியது என்ன என்பது புரியும். இன்று காலை எழும் போது நேற்று என்ன நடந்தது, யார் என்ன செய்தார்கள், இந்த உலகம், சமூகம், சூழல் என்ன செய்தது என்று பார்க்காமல், அதை சரி செய்ய அல்லது எதிர்வினை புரிய நம் திறமை, திறன் அல்லது மற்றவர்களின் திறமை, திறன் அறிவுரை ஆகியவற்றை நம்பி எழாமல், அன்னை மேல், அன்னை முறை மேல் நம்பிக்கையோடு எழுவது முதல் வேலை.

நம் வாழ்வு நம் அனுபவங்களை ஒட்டியே நடத்தப்படுகிறது. ஆனால் அந்த அனுபவங்களை தந்தவை, வந்தவை, நடந்தவை எல்லாமே, நம் மனப்பான்மையால், அபிப்ராயங்களால் தான் என்பதை சிந்தித்து பார்த்தால் புரிந்துக் கொள்ள முடியும். அப்படி என்றால் நம் மனப்பான்மை தான் நம் அனுபவங்கள் ஆகின்றன. அதுவே துன்பம் இன்பம் என்பதை முடிவு செய்கிறது. வாழ்வின் மறுமொழிகளை உற்பத்தி செய்கிறது என்பது புரிந்தால், அன்னையை நோக்கிய, அவர் விரும்பும் பண்புகளை நோக்கிய பார்வை, அல்லது அவர் விரும்பும் மனப்பான்மையை பெறுவது - ஆளுமை முதல் நடத்தை வரை அனைத்திலும் நம்மை பரிணாமத்தில், சித்தத்தில் உயர்த்தும். அதுவே நம் அகந்தையில் இருந்து ஜீவாத்மா, பரமாத்மா ஆகியவற்றை உணரும் வழி.

இவை எல்லாம் நம் அனைவருக்கும் தெரிந்த விஷயம் தான். ஆனால் ஏன் செய்வதில்லை என்றால் அதற்கு அடிப்படையான சில அறியாமை, மனப்பான்மைகளைக் குறிப்பிடுகிறார்.

1. முதல் அறியாமை - நம் மனம் எப்போதும் நம் எதிர்பார்ப்பு மற்றும் ஆசை, சுக சூழல் COMFORT ZONE ஆகியவற்றை ஒட்டியே அனைத்தையும் பார்க்கிறது. அது

எப்போதும் மனதின் குரலாக ஒலித்துக் கொண்டே இருக்கிறது. நம் ஆசை, உணர்ச்சி, EXCITEMENT - கிளர்ச்சி, MOOD - மனநிலை , ஆகியவற்றை ஒட்டி தன் குரலை மாற்றிக் கொண்டே இருக்கிறது. அந்தந்த MOMENT இல் அதை சரி என்று நினைக்கிறோம். அதன் அடிப்படையில் IMPULSE ஆக முடிவு எடுக்கிறோம். அன்னை, உயர்சித்தம், உயர் பண்புகள் எதுவும் நம் நினைவுக்கு வருவதில்லை. அதில் இருந்து அத்தகைய குரல்களை கேட்கும் நிலையில் இருந்து நாம் வெளியே வர வேண்டும். அதற்கு கர்மயோகி சொல்லும் வழி தான் STEP BACK என்னும் வழி. அல்லது ஒரு முடிவை செயல்படுத்தும் முன் Mother என்று நிதானமாக சொல்லி விட்டு செய்யும் முறை. கர்மயோகியின் பல உயர்சித்ததிற்கான வழிகளும் இன்று வாழ்வின் சட்டங்களாகவே வந்துவிட்டது. அது போல step back என்று இன்று HR training களில் எதையும் பேசும் முன் ஆழ்ந்த மூச்சை உள்ளே இழுத்து வெளியே விட்ட பிறகே பேச வேண்டும் என்று சொல்கிறார்கள். இன்று ONE-SEC, STAY FOCUS போன்ற ANDROID APP கள் அதை MOBILE இல் ஏ கொண்டு வந்து விட்டது. CALL வந்தால் ஒரு முறை அதன் மேல் மூச்சை இழுத்து விட்டால் தான் KEY , FINGER PRINT போன்றவை வேலை செய்யும். இது உயர்சித்த முறைகள் உலகில் பரவ ஆரம்பித்துவிட்டதன் அடையாளம். ஆனால் இதை கர்மயோகி கட்டுரையில் எழுதியது 1992இல் எனக்கு எழுதியது 2006-இல். இன்று அன்பர், என்று சொல்லிக்கொள்ளும் நம்மில் எத்தனை பேர் பின்பற்றுகிறோம் என்று பார்த்தால், நாம் ஏன் life divine புரியவில்லை என்று சொல்கிறோம் என்பது புரியும்.

இரண்டாவது அறியாமை, நாம் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒரு புரிதல் PERCEPTION வைத்து இருக்கிறோம். சூழல், செயல், பலன், மனிதர்கள் எல்லாம் அந்த எல்லைக்குள் நிற்கும் வரை அந்த PERCEPTION ஐ தாண்டி நாம் சிந்திப்பதே இல்லை. பிறர் சொன்னாலும் ஏற்றுக் கொள்வதில்லை. அதற்கு ஒரு பாதிப்பு வரும் போதே அதைப்பற்றி சிந்திக்கிறோம். உதாரணமாக அன்னையுடன் இருந்தவர், அன்னையின் உறவினர் என்பதற்காக அவர்களையும் அன்னையாக, அன்னை சேவை செய்பவராக நினைப்பது தவறு என்று கர்மயோகி சொல்லியும் பலர் அதை கேட்காமல் சென்று பலவற்றை இழந்தனர். ஒரு அன்பர் மற்ற அன்பர்களிடம் பண விஷயத்தில், மோசடி செய்து இருக்கிறார் என்று தெரிந்தும் தனக்கு மட்டும் அது நடக்காது என்று நினைத்து மேலும் கொடுத்து ஏமாந்தவர் அதிகம். யாரோ ஒரு மகான் எழுதியதை தன் பெயரில் போட்டுக் கொண்டால், அவரையும் மகானின் மறு உருவம் என்றே நினைப்போம். அவரால் நாம் பாதிப்பு அடைந்த பிறகே, அல்லது அப்படி ஒன்றை கேள்விப்பட்ட பிறகே நம்மால் மாற்றி யோசிக்க முடிகிறது.

அது போல பார்வையின், ஞானத்தின், வரையறைகளை, அதிலும் நாம் இருக்கும் COMFORT ZONE ஐ புரிந்துக் கொண்டால் நம் மனம் ஒரு முழுமையை, சத்தியத்தை புரிந்துக் கொள்ள முடியும். அது நம்மை சித்தத்தில் பரிணாமத்தில் உயர்த்தும்.

மூன்றாவது அறியாமை - ஒப்பிட்டே எதையும், தரத்தை, ஞானத்தை, மனப்பான்மையை , உயர்வை, பண்பை நாம் புரிந்துக் கொள்கிறோம். குறிப்பாக எந்த ஒரு நல்லதையும் அதற்கு எதிரான கெட்டதை வைத்தே புரிந்துக் கொள்கிறோம். நமக்கான GOAL POST ஐ நாம் நிர்ணயிப்பதில்லை. எந்த பிரச்சினையும் இல்லை என்றால் எல்லாம் சரியாக நடந்துக் கொண்டு இருக்கிறது என்னும் அளவிற்கே இருக்கிறோம்.

உதாரணமாக பல காரணங்களால், நேரமின்மை காரணமாக நான் என் வேலை நடக்கும் site க்கு செல்வதை குறைத்துக் கொண்டேன். பிரச்சினை எதுவும் இல்லாமல், client இடம் இருந்து COMPLAINT எதுவும் வராமல் இருந்ததால், நான் அதை தவறு என்று நினைக்கவில்லை. சமீபத்தில் தற்செயலாக ஒரு SITE க்கு சென்ற போது தான் தெரிந்தது நான் சொல்லும், SOP களை எதையும் பின்பற்றவில்லை என்று தெரிந்தது. CHECK LIST கள் பயன்படுத்தப்படவில்லை என்று தெரிந்தது. அவரவர் அனுபவம், அறிவு ஆகியவற்றிக்கு ஏற்ப நடந்துக் கொண்டு இருப்பது தெரிந்தது. அதாவது நாம் அறிந்த உயர்ந்த முறைகளை, அல்லது நாம் முன்பு பின்பற்றிய உயர்ந்த முறைகளை கூட இப்போது பின்பற்றுவதில்லை என்பது புரிந்தது. காரணம் நம் எதிர்பார்ப்பு, பலன் ஆகியவற்றுக்கு CHALLENGE வராததால். அப்படி இல்லாமல் ஒவ்வொரு நாளும் நம் பண்புகளுடன், நாமே போட்டி போட வேண்டும். ஒரு இழையாவது உயர்த்த முயல வேண்டும்.

இது பற்றி PREPARATION FOR TOKEN ACT என்னும் கட்டுரையில் - SPIRITUAL OPULENCE புத்தகத்தில் விளக்கமாக கொடுத்து இருக்கிறார். அந்த சித்தம், விழிப்புணர்வு இருக்கும் போது தான் நம்மால் சித்தத்தில் உயர முடியும். அங்கேயே நிற்க முடியும். அதிமனதின் நிலைகளை அனுபவிக்க முடியும்.

இது வரை முன்னேற்றம், உயர் சித்தம் பெற முடியாத இடங்களை இந்த கண்ணோட்டத்தில் பார்த்தால் எந்த நிலைக்கான அறியாமையின் ருசி நமக்கு பிடிக்கிறது என்பதன் தெளிவு நமக்கு வரும். அதில் இருந்து வெளியே வருவது வாழ்வில் அடுத்த கட்டம் செல்வது. அதை தாண்டி கர்மயோகி சொல்வதை ஏற்றுக் கொள்வது, அதன் படி நடப்பது ஆன்மாவிற்கு செல்வது. (it is complete organization of all planes to the psychic center).

அது அன்பரிடம் எப்படி வெளிப்படவேண்டும் என்றால் அன்னை எப்போதும் உடன் இருக்கிறார் என்று உணர்வது, அவருக்காகவே வாழ்வது, அவர் விரும்புபவரையே விரும்புவது, அவர் விரும்பும் பண்புகளையே வெளிப்படுத்துவது, பொய்யையும், பொய்யின் வடிவங்களையும், பொய்யான செயல்களையும், நண்பர்கள், உறவுகள் உருவில், பாசம் என்ற பெயரில் பண்பு என்ற பெயரில் ஏற்றுக் கொள்ளாமல் விலக்குதல், அன்னையை தவிர, வேறு எதற்கும், யாருக்கும், எதுவும் செய்ய சக்தி இல்லாத நிலை என்று வெளிப்பட வேண்டும். அப்போது நாம் மூன்றாம் நிலையில் இருந்து முதல் நிலைக்கு செல்ல கூடிய வாய்ப்புகள் வரும். அன்பர் என்பதில் இருந்து சாதகர் என்று சொல்லும் அளவிற்கு  வளர முடியும்.

அடுத்த கூடலில் அடுத்த அத்தியாயத்தை பற்றிய கருத்துக்ககளை என் பார்வையில் பகிர்ந்துகொள்கிறேன்.

==========================================================